## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2017

-----------------------------------------------------------------------------

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 3,000,000 கிரயமுடைய 02 வாகனங்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவாக ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் உள்ளகத் தொலைபேசித் தொடர்பு முறைமைக்கெனச் செலவிட்ட ரூபா 435,850 நிலையான சொத்தாக கணக்கிலிடப்படாது மீண்டுவரும் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டில் ரூபா 50,690 தேய்மான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுவது தவறியிருந்தது. ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 385,160 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2006 சனவரி தொடக்கம் 2014 டிசெம்பர் வரையான காலப்பகுதியின் பொருட்டு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பு நிலுவையான ரூபா 1,120,291 மீளாய்வாண்டின்போது செலுத்தப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவு முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்களாக திரண்ட நிதியத்தில் சீராக்கம் செய்யப்படாது மீளாய்வாண்டிற்கான செலவினமாகக் கணக்கிலிடப்பட்டதால் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,120,291 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் 22 கற்கை நெறிகளுக்கான கட்டணமாகப் பெற வேண்டிய ரூபா 4,595,450 கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) திறைசேரியால் சொத்துக் கொள்வனவுக்கான மூலதன மானியமாக வழங்கப்பட்ட ரூபா 5,862,944 காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிசார் நடவடிக்கைகளின் கீழ் காசு உட்புகுதலாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் மூலதன மானியக் கணக்கின் வேறுபாடாக ரூபா 2,756,154 மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான காலக்கழிவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்ட ரூபா 3,106,790 காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிசாரா விடயமாகப் பற்றாக்குறையிலிருந்து கழித்துக் கொள்ளப்படுவதற்குப் பதிலாக மூலதன மானியக் கணக்கில் ஈடுசெய்யப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப்பிரமாணம் 751 | அரச நிறுவனங்கள் பெறும் சகல பொருட்களும் புத்தகங்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் ரூபா 336,000 செலவில் 700 புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டபோதும், அப்புத்தகங்கள் பெறப்பட்டமை களஞ்சியத்தில் உள்ள கையிருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. |
| (ஆ) 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணிகளது பெறுமதி ரூபா 5,987,625 கூட்டுத்தொகையாகும். இவற்றிற்கென நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி பெறுபேறு ரூபா 10,443,422 பற்றாக்குறையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,739,560 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 7,703,862 நலிவு தென்பட்டது. மீளாய்வாண்டில் சம்பளமும் வேதனமும் ரூபா 7,729,138 அதிகரித்தும் நிர்வாக மற்றும் நிறுவகச் செலவினம் ரூபா 6,131,072 அதிகரித்தும் இருந்தமையே மேற்படி நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டில் அது மிகையாகிய மீண்டும் 2016, 2017 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறை ஆகியது. எவ்வாறாயினும், நிதிப்பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை

அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றைச் சீராக்கல் செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 18,763,348 ஆகிய பங்களிப்பு 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அதிகரித்தபோதும், மீண்டும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 40,362,184 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நிறுவகத்தின் நடவடிக்கைகளை குறுகிய கால மற்றம் நெடுங்கால தொலைநோக்குடன் முகாமைத்துவமிடுவதற்குக் குறைந்தது 3 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்து அதற்கமைய எண்ணிய இலக்கை அடையக்கூடியவாறு நிறுவகத்தை வழிநடாத்துவது பணிப்பாளர் சபையினது பூரண பொறுப்பாகும். எவ்வாறாயினும், நிறுவகம் கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

கூட்டிணைந்த திட்டத்தில் நிறுவனத்தின் (13) சக்திகளும் (05) நலிவுகளும் இனங்காணப்பட்டிருந்தபோதும், அவற்றைப் பகுப்பாய்வு செய்து அத்திட்டங்களை நாளதுவரையாக்கி எதிர்வரும் ஆண்டுகளில் தொடர்ச்சியாகச் செயலாற்றுவதற்கு கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியபோதும், அவ்வாறு நடைபெறவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பயிற்சிப் பிரிவு**

(i) தலைமை அலுவலகத்திலும் பிரதேச பயிற்சி நிலையங்களிலும் சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழி மூல மதியுரை டிப்ளோமா கற்கை நெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், வருடாந்தம் 450 மதியுரை டிப்ளோமாதாரிகள் பயிற்சி பெற்றிருந்தனர். இவ்வாறு பெற்ற பயிற்சியானது சமுதாயத்திற்கு வழங்கப்படுகின்றதா என்பதை நிறுவகம் பின்தொடர் நடவடிக்கைகளினூடாகக் கவனித்திருக்கவில்லை.

(ii) பயிற்சிப் பிரிவின் மூலம் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்கு உட்புகும் மாணாக்கரது எண்ணிக்கை மற்றும் கற்கை நெறிகளை நிறைவு செய்யும் மாணாக்கரது எண்ணிக்கை என்பன மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

**(ஆ) சமூக அபிவிருத்தி கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு**

சமூக அபிவிருத்தி கொள்கையைத் தயாரித்தல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் வெளியிடுதல் என்பன இந்த பிரிவின் மூலம் நடைபெறுவதுடன் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் 11 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 1,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான 720 ஆராய்ச்சி நூல்கள் மற்றும் சாஸ்தீரிய சஞ்சிகைகள் என்பவற்றை அச்சிடுவதற்கு ரூபா 499,264 செலவாகியபோதும், 2018 யூலை 01 ஆந் திகதியளவில் அப்புத்தகங்கள்

குறித்த பிரிவுகளுக்கு விநியோகிக்கப்படாதிருந்தன. அவ்வாறே, இப்புத்தக வெளியீட்டு விழா நடைபெறாமையால் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 140,000 பயன்படுத்தப்படாதிருந்தது.

(ii) ஆராய்ச்சிப் பிரிவால் வருடாந்தம் பிரசுரிக்கப்படும் பத்திரிகை முகவுரையில் நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கை நெறியினதும் பெயர் மாத்திரமே உள்ளடங்கியிருந்ததுடன், அக்கற்கை நெறிகளின் மூலம் கற்கை நெறி தொடர்பான மாணாக்கரது கருத்துரைகள் என்பன உள்ளடக்கப்படவில்லை.

(iii) சமூக அபிவிருத்திக் கொள்கையைத் தயாரித்தல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் என்பன இப்பிரிவின் கடமையாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், 06 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் 06 உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் பணியாற்றியபோதும், அந்த உத்தியோகத்தர்கள் முன்னைய ஆண்டின்போது சனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட கல்லீரல் நோயாளிகள் சம்பந்தமான ஆராய்ச்சியை மாத்திரமே மேற்கொண்டு, ஆண்டின்போது நிறைவேற்ற வேண்டிய ஆராய்ச்சிகளை இனங்கண்டு அவற்றை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்தவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் நூலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும் புத்தகங்கள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதைத் தெரியப்படுத்தும் உள்ளகச் சுற்றறிக்கையை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்திராததுடன், 2015 முதல் 2017 வரையான காலப்பகுதியின்போது 38 உத்தியோகத்தர்களால் 229 புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டு அவை திருப்பி அளிக்கப்படாதிருந்தன. அவ்வாறே, இத்தாமதம் தொடர்பாகவும் புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களை அறிவூட்டுதலும் நடைபெறவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறுவகம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பிரிவுக்கு விரிவுரை மண்டப வசதியின் பொருட்டு ரூபா 7,140,000 வருடாந்த வாடகையில் 04 மாடிக் கட்டிடம் ஒன்றை வாடகைக்குப் பெற்று அங்கு 03 விரிவுரை மண்டபங்களை ஏற்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டைப் போன்றே 2018 ஆம் ஆண்டிலும் விரிவுரை மண்டபங்களில் கற்கை நெறிகள் நடாத்தப்பட்டமைக்கான வகுப்பறை அறிக்கைப் புத்தகங்கள் (Record Book) பேணப்படாமையால் விரிவுரை மண்டப வசதிகள் தொடர்ச்சியாகப் பெறப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 137 ஆகும். உள்ளவாறான பதவியணியினர் 121 ஆகும். வெற்றிடங்கள் 16 ஆகும். பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் பேராசிரியர் பதவி 2014 முதல் கணக்காய்வுத் தினமான 2018 யூலை 20 வரை ஏறக்குறைய 04 ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளபோதும், 2018 யூலை 20 ஆந் திகதியிலும் அதற்கான ஆட்சேர்ப்பு தாமதமாகியவாறிருந்தது.

(ஆ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் நிறுவகத்திற்குச் சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர்கள் மூவரை நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கி பணிப்பாளர் நாயகத்தின் Dms/E/3/20/07/159/2 ஆம் இலக்க 2010 யூன் 24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தது. எவ்வாறாயினும், இந்த 02 பதவிகள்

வெற்றிடமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. 6½ ஆண்டுகளாக நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவால் நடாத்தப்படும் சகல பயிற்சி கற்கை நெறிகளையும் திட்டமிடுதல், முறையாக அமுலாக்குதல், பயிற்சியளித்தல், பயிற்சியளிப்பதற்கு தேவைப்படும் பயிற்சியாளர்களை இனங்காண்பதும் பயிற்சியளிப்பதும், நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அமுலாக்குதல் போன்ற கடமைகள் அமுலாக்கப்பட வேண்டியபோதும், பதவி வெற்றிடம் காரணமாக தாமதமின்றி கற்கை நெறிகளை நடாத்த முடியாது போன சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் பொருட்டு தேசிய அபிவிருத்தி நிறுவகம் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பாக எவ்வாறு செயலாற்றுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 வரவு, செலவுத் திட்ட கட்டுப்பாடு

வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றுக்கிடையே 50 முதல் 75 சதவீத வித்தியாசம் காணப்பட்டமையால் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக வரவு, செலவுத் திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் 10 ஆம் இலக்க கட்டளைப் பிரகாரம் நாட்டு மக்களிடையே வறுமை நிலவுவதற்கான காரணத்தின் அடிப்படை சம்பந்தமாக ஆராய்ச்சி மேற்கொண்டு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டபோதும் மீளாய்வாண்டு முடிவு வரை அது செயற்படுத்தப்படவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணி என்பவற்றிற்கு நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடம் நிரப்பப்படுவதில் தாமதம் நிலவுதல். |
| (இ) | கூட்டிணைந்த திட்டம் | நிறுவகம் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிக்கவில்லை. |